# MCOP.No.43/2019

**தேதி: 11.02.2026.**

**எ,ம.சா.1 : ( திரு. க. வேல்முருகன், த/பெ. கலியபெருமாள் )**

**முதல் விசாரணை**

**நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், நாகை மண்டலம், திருவாரூர் பணிமனை பேருந்தில் ஓட்டுநராகப் பணிபுரிந்து வருகின்றேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஆவணங்கள்,**

| | | |
|---|---|---|
| **எ.ம.சா.ஆ.1** | -- | என்னுடைய பணி அடையாள அட்டையின் ஜெராக்ஸ் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |
| **எ.ம.சா.ஆ.2.** | -- | என்னுடைய ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) |

மேற்படி ஆவணங்கள் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ-2 ஆவணங்களாக குறியீடுச் செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

விபத்து ஏற்படுத்திய அரசு போக்குவரத்து TN 68 N 0776 என்ற வாகனத்தின் ஓட்டுநர் அன்று நான் தான் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக முதல் தகவல் அறிக்கை என் பெயரில் தான் ஆரணி நகர காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்தில் சம்மந்தப்பட்ட TN 68 N 0776 என்ற வாகனத்திற்கு தான் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பெறப்பட்டது என்றால் சரிதான்.

நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் அந்த பேருந்தில் எத்தனை போர், யார் யார் சென்றார்கள் என்ற விவரம் குறித்த டிரிப் ஷீட் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, யார் யார் சென்றார்கள் என்ற விவரமும் எனக்கு தெரியாது. விபத்து சம்மந்தமாக என்னையோ, அப்போது அந்த

பேருந்தின் நடத்துநரையோ விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

நான் வேலூரிலிருந்து ஆரணி மார்க்கமாக வரும் பேருந்துகளுக்கு மாங்காமரம் பேருந்து நிறுத்தம், ஜெமினி பேருந்து நிறுத்தம், ஆரணி புதிய பேருந்து நிறுத்தம் மற்றும் பழைய பேருந்து நிறுத்தம் ஆகிய 4 நிறுத்தங்களில் பேருந்து நிறுத்தி செல்லும் என்றால் சரிதான். வேகத்தடை என்பது சின்ன மாரியம்மன் கோவிலின் எதிர் புறம் தான் உள்ளது என்றால் சரிதான். ஆனால் மாதிரி வரைபடத்தில் வேகத்தடையானது அவ்வாறு குறிப்பிடாமல் மாறுபட்டு வேறு இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

விபத்தில் இறந்த நபர் பேருந்திற்குள் நின்றுக் கொண்டிருந்தாரா அல்லது அமர்ந்துக் கொண்டிருந்தாரா என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக ஒரு பேருந்து நிறுத்தம் வருவதற்கு முன்பாகவே அங்கு இறங்க வேண்டிய நபர்கள் 200 மீட்டர் தொலைவில் நின்றுக் கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். விபத்தில் இறந்த நபர் சங்கர் என்பவர் முன்னாள் இராணுவ வீரர் என்ற விவரம் எனக்கு தெரியும், தினத்தந்தி நாளிதழில் பார்த்து தெரிந்துக் கொண்டேன்.

விபத்திற்கு முழுக்க முழுக்க காரணம் நான் பேருந்தை வேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியதால் தான் பேருந்து நிறுத்தத்தில் இறங்க வேண்டிய சங்கர் என்பவர் என்னுடைய அஜாக்கிரதையால் வேகத்தடையை கவனிக்காமல் வேகமாக இயக்கி தூக்கி போடப்பட்டதால் தான் பேருந்திற்குள் இருந்த சங்கர் என்பவர் படிக்கட்டின் வழியாக வேகமாக கீழே விழுந்து காயத்தால் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல, சங்கர் என்பவர் முதல் வேகத்தடையில் இறங்காமல் இரண்டாவது வேகத்தடையில் அவர் தன்னிச்சையாக குதித்து விட்டதால் தான், அவருக்கு

விபத்து ஏற்பட்டது.

நான் பேருந்தை இயக்கிக் கொண்டிருந்ததால் பேருந்திற்குள் யார் நின்றுக் கொண்டிருந்தார்கள், யார் இறங்கப் போகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றாலும், நான் அதை பார்க்கவும் முடியாது என்றாலும் சரியல்ல, வேகத்தடை வரும் போது என்னால் கண்ணாடி வழியாக பார்க்க முடியும். இந்த வழக்கிற்காக விபத்தை பார்த்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

என்னுடைய தமிழ்நாடு அரசு போக்குவரத்து நிறுவனம் ஒரு அதிகாரியை நியமித்து அதில் ஒரு அறிக்கை வழங்கப்பட்டது என்றாலும், அந்த விசாரணை அதிகாரி என்னை விசாரித்து அந்த விசாரணையின் அடிப்படையில் விபத்து என்னுடைய தவறால் தான் ஏற்பட்டது என்று என்னை பணி நீக்கம் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

விபத்தானது என்னுடைய அஜாக்கிரதையாலும், நான் பேருந்தை வேகமாக ஓட்டியதாலும் தான் ஏற்பட்டது என்றாலும், அதனால் மனுதாரர்களுக்கு எங்கள் நிறுவனம் தான் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டது என்றாலும் சரியல்ல, வேகத்தடையில் இறந்து போன சங்கர் தான் அவரே தன்னிச்சையாக எந்த தகவலும் தெரிவிக்காமல் அவரே இறங்கி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

Taken down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Petitioners / Respondents and admitted by the witness to be correct.

Sd./ C. Jayasree,
Additional District Judge,
Fast Track Court, Arani.